மருத்துவமனைகளை அரசு ஏற்றிருக்கிறது. இது முதல் ரகத்தைச் சேர்ந்த காரணத்தால் உடனடியாக எடுக்கப்பட முடியவில்லை, ஆனாலும் அரசு பரிசீலிக்கும்.

கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 75—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இல்லை.

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திலே, அரிசிப்பாளையத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த இடத்திற்கும் கந்தேகவுண்டன் சாவடிக்கும் 12 மைல் தூரம் இருக்கிறது. கந்தேகவுண்டன் சாவடியைச் சுற்றி மலைவாழ் மக்கள் எராளமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்திலே தொடங்குவதுதான் அரசின் கொள்கையாகும். அந்த வகையில், 374 ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற க.க. சாவடி கிராமம் மதுக்கரை ஒன்றியத்தில் இருக்கிறது. இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் 3,140. ஆகவே, அரிசிப்பாளையத்திலே இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அவர் குறிப்பிடுகின்ற க.க. சாவடிக்கும் 11 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மேலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த ஒரு கிளை நிலையம் இந்த கிராமத்தில் இயங்குகிறது. தற்பொழுது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை கொடுக்கின்ற திட்டமும் ஆய்வில் இருக்கிறது, எனவே, அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வழிவகையை அரசு செய்து கொண்டிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.